1524

REG D. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு

மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ளு புரட்டாசி-மீ 4உ 1940-ளு செப்டம்பர்-மீ 19உ | ஸ-37

ராஜ தம்பதிகளுக்குப் பாராட்டு.

நமது சக்ரவர்த்தியாரும் அவரது மனைவியாரும் அரண்மனையில் இருக்கும் போது ஜர்மன் விமான வெடிகுண்டு மேற்படிக் கட்டிடத்தின் மீது போடப்பட்டது. சக்ரவர்த்தியாரும், ராணியும் இந்தப் பெரிய விபத்திலிருந்து தப்பியதற்காக உலகம் முழுவதிலிருந்தும் அவர்களுக்கு பாராட்டு செய்திகள் குவிந்து வருகின்றன.

இந்தியாவிலிருந்துவைஸ்ராயும், மாகாண கவர்னர்களும் வாழ்த்துச்செய்தி யனுப்பி

சுக்கூர் ஹிந்துக்களின் பரிதாப நிலைமை.

முஸ்லீம் லீகே கலஹ காரணம்.

ஜஸ்டிஸ் வெஸ்டன் ரிபோர்ட்.

ஸுக்கூரில் மஹம்மதியர்கள், ஹிந்துக்கள் மீது படையெடுத்து த்வம்ஸம் செய்ததைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டிருந்த ஜஸ்டிஸ் வெஸ்டன் தமது ரிபோர்ட்டை வெளியிட்டிருக்கிறார்.

அங்கு நடந்த கலஹமானது மதஸம்பந்த முள்ளதல்லவென்றும், ராஜ்ய ஸம்பந்தம்

ஸர்விஸ் கமிஷன் செய்கை கண்டனம்

ஸம்ஸ்கிருதத்தை ஒடுக்குவதா ?

சென்னையில் கூட்டம்.

உத்யோகப் பரிக்ஷைக்கு வருகிறவர்கள் ஸம்ஸ்கிருதத்தை உபபாடமாக எடுத்துக் கொண்டிருந்தால் அவர்களுக்கு தேச பாஷைகளில் நல்லதேர்ச்சி யுண்டென்பதை நிரூபிக்க ரவென்யூ ஆபீஸர்களிடமிருந்து ஸர்டிபிகேட் வாங்கி

ஸம்ஸ்கிருதத்தின் மஹிமை

எல்லாபாஷைகளுக்கும் தாய்.

ஸம்ஸ்கிருதம் தெரியாத இந்தியருக்கு மதிப்பில்லை

ஐந்து பிரமுகர்களின் அபிப்பிராயங்கள்

சென்ற வாரத்தில் ஸம்ஸ்கிருத பாஷையின் கௌரவத்தைப்பற்றி ஐந்து பிரமுகர்களின் அபிப்பிராயம் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. சென்னை கவர்ன்மெண்டார் ஸம்ஸ்கிருதத்தை அலக்ஷியம் செய்யுமிச்சமயத்தில் அந்த அபிப்பிராயங்கள் யாவராலும் கவனிக்கத்தக்கவை. அவைகளைக் கீழே குறிக்கிறோம்:—

ராவ்பஹதூர் கே. வி. ரங்கஸ்வாமி அய்யங்கார்.

2வ யன்று பச்சையப்பன் கலாசாலையில் பேசிகையில் குறிப்பிட்டதாவது:—

“ஸம்ஸ்கிருதத்தின் பெருமையைப்பற்றி எனக்கு ஸந்தேஹமில்லை. எனக்கு ஆசிரியராக இருந்த புரொபஸர் வுல்ரிட்ஜ் என்பவர் உலகில் எது அழிந்தபோதிலும் ஸம்ஸ்கிருத பாஷை அழியாதென்று சொல்லியிருக்கிறார். ஆயினும் நமது கலாசாலைகளில் ஸம்ஸ்கிருதத்திற்கு போதுமான கௌரவம், அளிக்கப்படாதது வருத்தமாயிருக்கிறது.

ஹிந்திக்குப் பதிலாக ஸம்ஸ்கிருதத்

“பண்டிதர்„ என்ற பெயரை மாற்றி சிலர்” லெக்சரர்„ என்று பெயர் வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்திய மஹாராஜா ஒருவர், ட்யூக் என்றும், ஏர்ரல் என்றும் பெயர் வைத்துக் கொள்வது போலவே இது இருக்கிறது. ஸம்ஸ்கிருத வித்வான்கள், தங்களை பண்டிதர் என்று அழைப்பதில் வெட்கப்படக்கூடாது”

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரியார்.

ஸெப்டம்பர் 5வ யன்று சென்னை கோகலே ஹாலில் புதிய ஸம்ஸ்கிருத வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் ஸம்ஸ்கிருதத்தைப் பற்றிக்கூறியதாவது:—

“இந்த தேச நாகரிகம், கலாபிவிருத்தி, படிப்பு, மதம், முதலியன ஸம்பந்தமாக ஸம்ஸ்கிருதபாஷை பெரிய பாகம் வஹித்திருக்கிறது. ஸமீபத்தில் வெளியான வெப்ஸ்டர்ஸ் ஆங்கில அகராதியில் 15 ஆயிரம் ஸம்ஸ்கிருத வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதர தேசங்களில் ஸம்ஸ்கிருதத்திற்கு இருக்கும் மதிப்பு பெருமை சிறப்பு, செல்வாக்கு ஆகியவை இதனால் விளங்கும்.

ஸம்ஸ்கிருதம் இறந்து விடவில்லை. ஒரு நாளும் அது இறக்கப்போவதில்லை.

தமிழ், தெலுங்கு பாஷைகளில் ஸம்ஸ்கிருதம் தாராளமாக கலக்கப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்திலிருந்துதான் இதர இந்திய பாஷைகளின் அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தின் உதவியால் தான் நமக்குள், கலைஞான

வங்காளப் பள்ளிக்கூடங்களை ஹிந்துக்கள் பஹிஷ்கரிப்பார்கள்.

போட்டி யூனிவர்ஸிடி ஸ்தாபிக்கப் படும்

டாக்டர் மூகர்ஜி கர்ஜனை

வங்காளத்தில் மந்திரி ஸபையானது முஸ்லீம்களுக்கு ஸாதகமாயும், ஹிந்துக்களுக்கு விரோதமாயும் பற்பல காரியங்களை அடுக்கடுக்காகச் செய்து வருவதால் ஹிந்துக்கள் பெரிதும் மனக்கலக்கம் அடைந்திருக்கிறார்கள்.

நடுத்தரக்கல்வி விஷயமாக அங்கு ஒரு மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதன் அமைப்பு முற்றிலும் ஹிந்து ஸமூஹத்திற்கு விரோதமாயும் முஸ்லீம் ஸமூஹத்திற்கு சாதகமாயும் அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட ஸபையில் இதைப்பற்றி பலத்த ஆக்ஷேபம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மசோதாவை நிறைவேற்றினால் வங்காளத்திலுள்ள 1500 நடுத்தரப்பள்ளிக்கூடங்களையும் ஹிந்துக்கள் பஹிஷ்கரித்துவிடத்தயாராக இருப்பதாயும், வேறு பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுமென்றும் தனி யூனிவர்ஸிடியை ஸ்தாபிக்க தாம் ஒரு கோடி ரூபாய் வஸூலிக்கப் போவதாயும் டாக்டர் மூக்கர்ஜி பொதுக் கூட்டங்களில் பிரசாரம் செய்து வருகிறார்.

அடகுக்கடன் மசோதா.

மனீஷாபஞ்சகம்.

கும்பகோணம் அத்வைத சபையில் வரகூர். ஸ்ரீவேங்கடராமசாஸ்திரிகள் செய்த பிரசங்கம்

வாராணஸியில் பகவத்பாதாளுக்கும் சண்டாளனுக்கும் ஸம்வாதம் நடந்தது. இதன் பூர்வோத்தரவிருத்தாந்தங்களை நன்றாய் கவனிக்கவேண்டும். அப்படி கவனித்தால் இக்காலத்திய சங்கைகளுக்கே இடமில்லை. ஸாக்ஷாத்பரமேச்வரனே சண்டாள வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறார். அநேக சங்கரவிஜயங்களிருப்பதால் கதையும் வெவ்வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இது விஷயத்தில் ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது

வேதாந்தார்த்த நிர்த்தாரணம் செய்வதற்காகத்தான் ஆசார்யாளின் அவதாரம். அதை ஆக்ஞாபிப்பதற்கு, அவருடைய பாவனையை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கும் தான் விச்வேச்வரன் நான்குவேதங்களையும் நான்கு நாய்களாகச் செய்துகொண்டு சண்டாளவேஷம் போட்டுக்கொண்டு வந்தார்.

சிஷ்யர்கள் தூரவிலகிநில், என்று சொன்னார்கள்.

சண்டாளன்பதில்:— ஓய்! வேஷம் மட்டும் பெரியதாயிருக்கிறதே தவிர அதற்குத் தகுந்த அனுஷ்டானமில்லையே. வேதாந்தார்த்தவிசாரம் தான் ஸன்யாஸிகளின் காரியம் தண்டம, கமண்டலு, காஷாயம். சாதுர்யமான பேச்சு எல்லாம் இருக்கின்றன. அனுபவம் மட்டும் இல்லை. ஞானச்சரக்கை விற்கும் வியாபாரிநீர்· கிருஹஸ்தர்களை வஞ்சித்துயதேஷ்டமான பிக்ஷையைப் பெறு

எலெக்ட்ரிக் கரண்ட் எங்கும் நிறைந்து எல்லா விடத்திலும் ஒரே மாதிரியாகத் தானிருக்கிறது. கம்பியிலுமிருக்கு என்பதை அவரவர்களுடைய அனுபவத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம், அப்படியிருந்தும் எலெக்ட்ரிக் பல்பினால் தான் நம் கண்ணுக்கு தெரியும்படி அபிவ்யக்தமாகிறது. அது போல் சைதன்யம் வியாபகமாயிருந்தாலும் மனதால் தான் அபிவ்யக்தமாகிறது மனஸின் தாரதம்யத்தால் ஞானத்திலும் தாரதம்யம்.

ஸ்வயம் பிரகாசமான ஒரே சைதன்யம் ஜாக்ரதவஸ்தையில் ஸ்தூல பதார்த்தங்களையும் ஸ்வப்னத்தில் ஸூக்ஷ்ம பதார்த்தங்களையும் ஸுஷுப்தியில் ஆனந்தத்தையும் பிரகாசப் படுத்துகிறது. அந்த அவஸ்தாபேதத்தாலும் ப்ரகாச்ய வஸ்து பேதத்தாலும் ஆத்மாவுக்கு பேதம் கிடையாது. எவன் பிரும்சேரி நோட்டு வாங்கிக் கொண்டானே அவன் தான் பிற்காலத்தில் பணம் வாங்கிக் கொள்கிறான். அவஸ்தாபேதத்தால் ஆத்மாவுக்கு பேதமிருக்குமானால் காரியங்கள் ஒன்றுமே நடைபெறாது. பிரஹ்மாதி பிபீலிகாந்தமான எல்லாசரீரங்களிலும் ஒரே ஆத்மாதான். அவன் தான் நான் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

திருச்யமான சரீராதிகளில் நான் என்ற நினைப்பு அக்ஞானத்தால் ஏற்பட்டது. உண்மையாக சரீர தர்மம். அவனுக்கு தன் வயிற்றை வளர்ப்பதற்காக பண்டிகையில் புலிவேஷம் போட்டுக் கொண்டவன் குழந்தைகளை பயமுறுத்துகிறானே தவிர பிராணிகளை ஹிம்ஸிப்பானா? இது போல் நாடகத்தில் ஸ்திரீ வேஷம் போட்டுக் கொண்டவன் புருஷனுடைய உபபோகத்திற்கு அர்ஹனாவனா? இவ்விதம் ஜீவன் ஆத்மாவும் தன் அக்ஞானத்தால் சண்டாள பிரும்

டாலும் அதை யாராவது உடுத்திக் கொள்வார்களா? ஆதலால் சண்டாளசரீரம் விலகியிருக்க வேண்டியது தான். அவன் சமீபத்தில் வந்தால் ஞானிக்கு ஒன்றுமில்லை. பிரஹ்மதேஜஸை தாங்கக் கூடிய சக்தி சண்டாளனுக்கு இல்லாததினால் அவனுக்குத் தான் அனர்த்தம் ஏற்படும்.

2-வது ச்லோகம்

கயிற்றில் பாம்புபோல் சகலஜகத்தும் சித்தில் என்னால் மாயையாய் கல்பிதம். நான் சச்சிதானந்த ரூபி என்ற நிச்சயம் எவருக்கு இருக்கிறதோ அவர் தான் பெரியவர்

3வது சுலோகம்.

என்னை தூஷித்தாயே! எல்லாம் பிராரப்தத்தால் நடக்கிறது. எனக்கும் சரீரத்திற்கும் சம்பந்தமில்லை. எல்லாம் நச்வரம் இந்தவிஷயத்தை அனுபவம்வந்த ஆசார்யாள்உபதேசிக்கவேண்டும் இல்லா விட்டால்பேதஞானம் தான் த்ருடப்படும். ஒரு வர்சித்திரத்திலிருக்கும் யானையும் பட்டத்து யானையும் எல்லாம் பொய்தான் என்று சிஷ்யர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கும் பொழுது ஒருயானைமதம் பிடித்து ஓடிவர அதைக்கண்டுபயந்து இவர்கள் ஓடிப் போகவும் இப்பொழுது தான் எல்லாம் பொய் என்று உபதேசித்தீர்கள் இப்பொழுது ஏன் ஓடுகிறீர்கள் என்று கேட்டதற்கு சாதுர்யமாக யானையும் பொய் ஓடுவதும் பொய் என்று சொன்னார்களாம். ஆதலானுண்மையான அனுபவம் இருக்கவேண்டும். அவன்தான் பெரியவன், இந்தசுலோகத்தில் துஷ்கிருதபதத்தால் சுகிர்தத்தையும் கிரஹிக்க வேண்டும். ஞானிகளுக்கு புண்யம்பாபம் இரண்டும் அனிஷ்டபலத்தை கொடுக்கக் கூடியதுதான்.

4-வது சுலோகம்.

எல்லாசரீர்ங்களிலும் அஹம் என்று

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆ ர் ய த ர் ம ம்
விக்ரம-ஸ்ரீ புரட்டாசி-மீ 4உ

காந்திஜியின் கலஹாஸ்பத தீர்மானம்

அஹிம்ஸை முதலிய அனுபவ ஸாத்ய மற்ற கொள்கைகளிலிருந்து காங்கிரஸ் விடுதலை பெறுமென்று சில வாரங்களாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பம்பாய் கூட்டமானது இதற்கு மாறான நிலைமையை ஏற்படுத்திவிட்டதுடன் இன்னும் விபரீத

யுத்தத்தில் இந்தியாவை ஸம்பந்தப்படுத்து முன் பொது ஜனங்களையோ, மந்திரிகளையோ, ஜனப்பிரதி நிதிகளையோ கலந்து கொள்ளவில்லையாம். ஆஸ்திரேலியா, கானடா, போன்ற மற்ற குடியேற்ற நாடுகளை அபிப்பிராயம் கேட்டார்கள். அயர்லாந்து தன்னிஷ்டப்படி நடு நிலைமை வஹிக்கிறது. இந்தியாவில் உண்மையான ஜனநாயகம் இருந்தால் ஜனப்பிரதிநிதிகளைக் கலந்தேயல்லவோ யுத்த கார்யத்தில் ஸம்பந்தப்படுத்தவேணும்? கவர்ன்மெண்டார் அம்மாதிரி மரியாதை காட்டாததால் இந்த யுத்தத்தில் நாம் ஒத்துழைக்க முடியாதென காங்கிரஸ் தீர்மானம் கூறுகிறது காந்திஜியும் இதையே பேசியிருக்கிறார்.

ஆதலால் இந்த யுத்தத்தில் கலக்க வேண்டாமென்றும், உதவி புரிய வேண்டாமென்றும் பொது ஜனங்களிடையில் பிரசாரம் செய்ய காங்கிரஸ் காரர்களுக்கு உரிமையுண்டாம். குறிப்பிட்ட ஒரு குறைக்காக ஸத்யாக்ரஹம் நடத்துவதுதான் தமது ஸத்யாக்ரஹதர்மமாம். ஆகையால் இந்தக் குறையை காந்திஜி தேடிப் பிடித்து தமது சண்டைக்குக் காரணம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்.

இந்த உரிமையை வைஸ்ராயோ, பிரிடிஷ் காரரோ அங்கீகரித்து காந்திஜியின் இஷ்டப்படி யுத்த எதிர்ப்பு பிரசாரம் செய்ய அனுமதி கொடுக்க வேணுமாம். அந்த மாதிரி அனுமதி கொடுக்க முடியுமா முடியாதா வென்று ராஜப்பிரதிநிதியை தாம் நேரில் கண்டுகேட்கப் போவதாக காந்திஜி கூறுகிறார். இதுதான் பம்பாய் தீர்மானத்தினுடையவும். காந்திப் பேச்சினுடையவும் ஸாராம்சமாகும். இந்த அபிப்பிராயத்திற்கு அகில இந்தியக் கமிட்டியும் ஆதரவு

ஸைக்குழப்பத்தை அங்கீகரித்த நேர்மை தான் என்ன?

ஜனநாயகத்தைப் பற்றி அதிகம் பேசி வரும் காங்கிரஸானது காந்திஜியை ஓர் ஸர்வாதிகாரியாக நியமித்துக் கொண்டதும் பம்பாயில் நடந்த விசேஷங்களில் ஒன்றாகும். பேச்சு ஸவந்திரமே, ஸ்வராஜ்யத்தின் திறவுகோல் என்று காந்திஜி கர்ஜிக்கிறார். காங்கிரஸ் மெம்பர்களுக்குள்ளேயே இந்த உரிமை காப்பாற்றப் படுகிறதா? எம் என். ராய் போன்றவர்கள் மீது நடவடிக்கை என்? காங்கிரஸ் மந்திரி ஆக்ஷிகாலத்தில் இந்தப் பேச்சு ஸ்வந்திரம் எப்படி மதிக்கபட்டது? அஹிம்ஸையானது காந்தி சொல்லுவது போல் எல்லா விஷயங்களுக்கும் எல்லா அதிகாரிகளுக்கும் எல்லா காலத்திலும் ஏற்றதா? அது நிலைக்ககூடியதா? இத்யாதி விஷயங்களைப்பற்றி சிந்தனா சக்தியுடனும், தீர்க்கதிருஷ்டியுடனும் யோஜித்து முடிவு கூற வேண்டும். அஹிம்ஸை விஷயமாக காந்திஜியின் அபிப்பிராயம் முற்றிலும் அபத்த மென்றும், அது ஒரு வெறும் புரட்டு என்றும் ஸமீபகாலத்தில் எல்லா ராஜீயக்கக்ஷிப் பிரமுகர்களாலும் தெளிவாக வெளியிடப்பட்டு வருகிறது ஆதலால் பம்பாய் தீர்மானம் தேசத்திற்கு விபரீத வழியைக் காட்டுவதாயிருப்பதால் யாவரும் அதை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

சட்டஸபை கூட்ட முடியாது.

இடமும் கொடுக்க வியலாது,

சென்னை சட்ட ஸபைத்தலைவர் ஸ்ரீபுலுசு ஸாம்பமூர்த்தி, தாம் சட்ட புஸ்தகத்தைப் புரட்டிப் பார்க்க வருவசாயும், விசேஷ ஸம்

குறிப்பு.

ஸம்ஸ்கிருதம் படித்ததற்கு தண்டனையா?

சென்னை பப்ளிக்ஸர்வீஸ் கமிஷனனது மறைமுகமாக ஸம்கிருதபாஷையின் மீது பாணம் போட்டதை இம்மாகாணத்தி லுள்ள கல்வியறிவுள்ள பேர்கள் யாவரும் பலமாக ஆக்ஷேபிக்க முன்வந்தார்கள். இதன் மீது அந்த உத்திரவு சிறிது திருத்தப் பட்டிருக்கிறது. ஆயினும் அதன் விஷத் தன்மை குறைந்ததாக நினைக்கமுடியவில்லை.

பப்ளிக்ஸர்வீஸ்கமிஷன் பரிக்ஷைக்கு ஆஜராகும் மாணவர்கள் ஸம்ஸ்கிருதத்தை இரண்டாவது பாடமாக எடுத்துக் கொண்டிருந்தால்கூட சேர்த்து கொள்ளப் படமாட்டார்களென்று முதல் உத்திரவில் கூறப்பட்டது. ஆனல் இப்போது வெளியிட்டுள்ள திருத்த உத்திரவில் ஸம்ஸ்கிருதத்தை உபபாஷையாக கற்றவர்கள் பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் பரிக்ஷைக்கு ஆஜராகக் கூடாதென்ற நிர்பந்தம் நீங்கப்பட்டிருந்த போதிலும், மாணவர்கள் ஸம்ஸ்கிருதத்தை விரும்பாமல் ஒதுக்குவதற்கு வழிசெய்யப் பட்டிருப்பது குறையவில்லை. ஸம்ஸ்கிருதத்தை உப பாடமாக எடுத்துக்கொண்ட மாணவர்கள் ஸர்வீஸ் கமிஷன் பரிக்ஷைக்கு ஆஜராக வேணுமானல் அந்தந்த ஊரிலுள்ள ரிவின்யூ டிவிஷனல் ஆபீஸர்களிடமிருந்து, தேச பாஷையில் தேர்ச்சியுள்ளதென்பற்கு ஸர்டிபிகேட் வாங்கி தாக்கல்செய்ய வேண்டுமென்று இப்போதிய உத்திரவுகூறுகிறது.

ஸம்ஸ்கிருதம் எடுத்துக்கொண்டவர்களுக்கு ஒரு தண்டனை விதிப்பது போலுள்ளது.

தக்ஷிணாயன பிரதம விவாஹ நிர்ணயம்.

வித்வான்களின் அபிப்பிராயம் கோரப்படுகிறது.

கும்பகோணம் அத்வைத ஸபையின் 46-வது வித்வத் ஸதஸில் (1—9—40)ல் செய்த தீர்மானம்.

கார்யதர்சியின் அறிக்கை.

ஸபையில் இது ஸம்பந்தமாக அன்றய தினம் காரியதரிசி பேசுகையில், இந்த விவாஹ சம்பந்தமான பிரச்னம் 1937ஆ வந்ததென்றும் அந்த ஆ பண்டிதர்கள் விசாரம் செய்தார்களென்றும் அடுத்த வருஷத்தில் பண்டிதர்கள் பிரமாண புரஸ்ஸரமாய் எழுதியனுப்பவேணுமென்று கோரப்பட்டது என்றும் 1938ஆ சில பத்திரங்கள் பண்டிதர்களிடமிருந்து கிடைத்ததென்றும் 1939ஆ ஸதஸ்ஸில் அவைகளை பார்வையிட்டும், பிரும்மஸ்ரீ வரகூர் வெங்கடராம சாஸ்திரிகள் ஷை விவாஹத்திற்கு அனுகூலமான பிரமாணங்களைச் சொல்லியும் செய்தார்களென்றும், பிரும்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் ஷை விவாஹம் செய்யத்தக்கதில்லையென்று பிரமாணங்கள் சொல்லி வாதித்தார்கள் என்றும் இவைகளை கேட்டு பிரும்மஸ்ரீகள் பக்ஷிதீர்த்தம் ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்கள் போலகம் ராம சாஸ்திரிகள் கே. பாலசுப்ரமண்ய அய்யரவர்கள் மூவர்களையும் மத்யஸ்தர்களாக உபய வாதிகளும் ...

கும்பகோணம்

ஸ்ரீ சங்கரவிஜய உபன்யாஸம்.

சென்ற 12—9—40 ஏகாதசி யன்று, வழக்கம்போல், ஸ்ரீமடம் டபீர்தெரு முத்திராதிகாரி, வேதாந்த சிரோமணி, வாஸுதேவ சாஸ்திரிகள் அவர்களால் அக்ரஹார வாசிகளுக்கு காவிரிப்படித்துறையில், ஸ்ரீ சங்கர விஜயம் உபந்யாஸம் செய்யப்பட்டது. அன்று கட்டத்தில், காசிராஜா மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஸ்ரீ ஆதி பகவத்பாதாளுக்கு சிஷ்யனாய் இருந்து கொண்டு, கைங்கர்யம் செய்து வந்ததும், ஸ்ரீ ஆதி பகவத்பாதாள் தான் செய்த பாஷ்யத்தை அங்கு ஸ்ரீகாசியில், குகை முதலியவைகளில் தபஞ் செய்து வரும் ரிஷிகளுக்கு காட்டி ஆமோதிக்கப்பட்டுப், கங்காநதியின் அக்கரையிலிருந்த தன் சிஷ்யர் ஸனந்தனரை இக்கரையிலிருந்து கூப்பிட்டதும் உடனே அவர் கங்கையில் நடந்து வர, கங்கையில் தாமரை புஷ்பங்கள் தோன்றி அவரை, முழுகாமல் தாங்கி அக்கரைக்கு வரும்படி செய்ததும் அவருடைய பக்தியைப்பார்த்து, அவருக்கு பத்மபாதர் என்ற நாமம் சூட்டியதும் ஸ்ரீ ஆதி பகவத் பாதாள் அநேகம் சிஷ்யர்களுக்கு சுலபமாக ஆத்மவித்யை உபதேசம் செய்வது முதலான விஷயங்களைப்பற்றியும் விரிவாக சுமார் $1\frac{1}{2}$ மணி சாவகாசம் சொல்லப்பட்டது.

ஸ்ரீமடத்திலிருந்து வழக்கமாக அஷ்டமிக்குச்செல்லப்படும் பசு நெய்யை, துவாதசியன்று கொடுப்பவருக்கு சமீபத்தில் நேரிட ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யஸ்வாமிகள் முத்ராதிகாரிக்கு அனுக்ரஹம் செய்யப்பட்டு, கொடுக்கும்படி கொடுக்கப்பட்டி...

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

என் தாமதம்? நமது அரசாங்கம் ஜயிப்பது நிச்சயம். வேண்டிய தைவீககர்மாவும் மநுஷ்ய யத்னமும் நடக்கின்றது. என் விரைவில் சத்ரு தோற்கவில்லை? நமது ஆலயங்கள் சுத்தப்படுத்தாமையே காரணம்.

நச்சு பொய்கையோ? ராஜபுதான பாலவனத்திலுள்ள ஓர் ஏரியின் அருகே போவோருக்கு பலமான தாஹமெடுக்கிறது. முழங்கால் ஜலத்தில் இறங்கியவுடன் இறந்து விடுகின்றனராம்.

ஜய ஜய சாமராஜ உடையார்! தந்தையை பின்பற்றுவதாக கூறிய மைசூர் மகாராஜாவின் சொல் எல்லா விஷயங்களிலும் விசேஷமாக மத தர்ம விஷயங்களிலும் அநுஷ்டிக்கப்படுமாயின் ராஜ்யம் செழிக்கும். தார்மீகர் வாழி! வாழி!!

தலை அழுகினல்! எல்லாவற்றிற்கும் தலை முக்யமல்லவா? அண்ணாமலை சர்வ கலாசாலை தலைவர் பட்டதாரிகளுக்கு விநயகரைக் கேலியாகக் கூறினராம். அதற்கு ஸ்ரீமான் தர்ம ரக்ஷாமணி கே. பாலசுப்பிரமணிய அய்யர்வாள் மாம்பல விநயக ஆலயத்தில் தக்க பதிலளித்தார்.

ஐயோ பாபம்! ராஜாஜீ சட்டஸபைத் தலைவரைக்கொண்டு சட்டசபையைக் கூட்டி தனது இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய முயன்றார். சிலகக்ஷித்தலைவர்கள் மறுத்தார்கள். கவர்னர் இடங்கூட கொடுக்கமறுத்து விட்

ஆலயப்பிரவேசக் கண்டனக் கூட்டம்

அகில இந்திய வர்ணாஸ்ரம ஸ்வயராஜ்ய கிளைச் சங்கம்
காரையார்கோவில்

விக்ரம-வ௵ ஆவணி-மீ 31-உ (15-9-40) இரவு 7¼ மணிக்கு காரையார்கோவில் தேவாலயத்தின் முன்பு ஷை சங்கம் ஆதரவில் தேவகோட்டை வக்கீல் ஸ்ரீ டி. ஜி. நாகரெத்தின சாஸ்திரிகள் பி.ஏ. அவர்கள் தலைமையில் தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டக் கண்டனம் என்பது பற்றி தேவகோட்டை அட்வகேட் ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஷையூர் ஸ்ரீ என். கிருஷ்ணசாஸ்திரிகள் இருவர்களும் ஆகமம், சாஸ்த்திரோக்தம், தற்கால அரசியல் இவைகளிலிருந்து சரியான மூகாந்திரங்களுடன் தக்க ஆதாரவுகளுடனும் மிகவும் அழகாகவும் விமரிசையாகவும் பொது மக்கள் பரவசமடையும்படி உபந்நியசித்தார்கள். அவ்வமயம் இவ்வூர் ஜில்லா போர்டு அங்கத்தினர் ஸ்ரீ சொ. வ. காளிமுத்துப் பிள்ளையவர்கள் பொது மக்களுக்கு எழுதி கொடுத்துள்ள ஹரிஜன ஆலயப்பிரவேச எதிர்ப்பு தஸ்தாவேஜின்புகைப்படக் காப்பி பொது ஜனங்களுக்கு பார்வைக்கு தலைவர் அவர்களால் எடுத்துக் காண்பிக்கப்பட்டது கூட்டம் வந்தனோப சாரத்துடன் இரவு 10½ மணிக்கு இனிது முடிந்தது.

அ. இ. வ. கிளை சங்கம்
காரையார்கோவில்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் மதுரை நகர்

7வது ஸம்மேளனம்.

22—9—40 ஞாயிற்றுக்கிழமை மதுரை டவுன் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் 7-வது வருஷ ஸம்மேளனம் தமிழ்ச்சங்கம் ரோட் 55நெ பங்களா ஸ்ரீ ஸநாதன தர்ம வித்யாலய மண்டபத்தில் நடைபெறும். அதற்குச்சென்னை ஸ்ரீ புருஷோத்தமதாஸ், கோகுலதாஸ் அவர்கள் அத்யக்ஷபதவி வஹிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். தேவகோட்டைஸ்ரீமான் கரு. கி. ஸ்வர்ணநாதன் செட்டியார் அவர்கள் ஸம்மேளனத்தைத் திறந்து வைப்பார்கள். தேவகோட்டை ஸ்ரீமான் அள. சு. ப. பள. சுப்ரம்மண்யன் செட்டியார் அவர்கள் சங்கக்கொடியேற்றி வைப்பார்கள்.

அயிலூர்

ஸ்ரீ ராமாயண ப்ரவசனம்:— அயிலூர் என்கிற (முசிறி தாலூகா ஸ்ரீராம சமுத்திரம் என்னும்)கிருமத்தில் ஆடுதுரை பெருமாள் கோவில் ஸ்ரீ லக்ஷ்மிகாந்த சர்மா அவர்கள் 1—9—40 தேதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஸ்ரீமத் ராமாயணத்தை ப்ரவசனம் செய்ய ஆரம்பித்து 15 தினங்களில் பூர்த்தி செய்து விடுவதாக அவ்வூர் கிருமஸ்தர்களுடைய விசேஷ ஊக்கத்துடனும், முயற்ச்சியினுடனும் நடத்தப்பட்டு வருகிறது.

ஓ. கி.

கடற்கரை விமானப் படையின் வெற்றிகரமான வேலை

வெளியூர் செய்திகள்

ஆனந்தாச்ரம ஸம்ஸ்கிருத பாடசாலை.

மேலக்காவேரி.

இப்பாடசாலை 1924-ஞு ஆரம்பிக்கப்பட்டு 1926-ஞு கவர்ன்மெண்டார் அங்கீகாரம் பெற்று இதில் ஸம்ஸ்கிருத ஸ்கூல்களின் பாடதிட்டப்படியும் ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. தக்க அனுபவம் பயிற்சி பெற்றவர்கள் ஆசிரியராக அமைந்திருக்கின்றனர். சிறிய பருவமுதலே மாணவர்களுக்கு தெய்வ பக்தியை உண்டுபண்ணக்கூடியவைகளான சந்தியாவந்தனம் ஸம்க்ஷேப ராமாயணம் ஸஹஸ்ரநாமம் முதலியவைகளும் பாடசாலைக்கு விரோதமன்னியில் கற்பிக்கப்படும். ஆகவே பெற்றோர்கள் போஷகர்கள் தமது சிறுவர் சிறுமிகளை மதப்பற்றை உண்டுபண்ணுகிற நமது பாடசாலைக்கு அனுப்பி நமது பிரயாசையை ஸபலமாக்கும்படி வேண்டுகிறேன்

ஆஸ்திகர்கள் யாவரும் ஸம்ஸ்கிருதம் படிக்கவிரும்பும் தங்கள் குழந்தைகளை இப்பாடசாலைக் கனுப்பக் கேட்டுக்கொள்கிறோம்.

கமிட்டியார்.

மேலக்காவேரி ஏகாதசி உபன்யாஸம்.

குடந்தை ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாளின் ஆக்ஞைபடி மேலக்காவேரி ஆனந்தாச்ரம ஸம்ஸ்கிருத பாடசாலையில் 12—9—40 வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு ஷை பாடசாலைத்தலைவர் பிரும்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளால் ஸ்ரீகளின்

சீகாழியில் கீதோபன்யாஸம்

சீகாழி சந்நிதிவீதியில் ரிடயர்ட் போஸ்டு மாஸ்டர் பிரம்மஸ்ரீ டி. கல்யாணராமய்யர் அவர்கள் கிருஹத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி கும்பகோணம்ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு பிரம்மஸ்ரீ ரா. சுப்பராமய்யர் அவர்களால் நடந்து வரும் ஸ்ரீமத் பகவத் கீதோபன்யாஸத்தில் 20-வது உபன்யாசத்தில் கீதை 2-வது அத்யாயம் 7, 8, சுலோகங்கள் உபன்யஸிகப்பட்டது. அதில் ஆசார்ய சிஷ்ய லக்ஷணம் ஸாதன சதுஷ்டயம், ஸப்த ஞான பூமிகளின் இலக்ஷ்ணம் அர்ஜுனன் ஆத்ம ஞானமடைய அதிகாரிதானா? எவ்விதத்தில் அதிகாரி? அதற்கு நியாயங்கள் அவனிடத்தில் என்னென்ன எப்படிபொருந்தியுள்ளன? என்பவைகளைப் பற்றி வடமொழி தென்மொழி நூல்களிலிருந்தும் அனேக மேற்கோள்களுடன் நன்கு விளக்கி, ஆங்கு வந்துள்ள ஆசார்ய பக்தியுக்தாளான, ஆஸ்திக ரத்னங்களாகிய அனேக ஸ்திரீ புருஷர்களின் மனந்தெளிந்து மகிழ்சியடையுமாறு காலை 7½ மணியிலிருந்து இரண்டு மணி நேரம் உபன்யாசம் செய்தனர்.

நகி

திப்பிராஜபுரம்

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா:— 29—9—40 வியாழக்கிழமை ஏகாதசியானபடியால் ஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகளவர்கள் 'ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்' என்னும் கட்டத்தை தனது இனிய சாரீரம் சம்பத்துடனும் கல்பனா சக்தியுடனும் அதிவிமரிசையாக உபன்யஸித்தார்கள்..

31—8—40 தேதி சனிக்கிழமை தினம்

பிரபல ஸஜ்ஜனியின் மரணம்

ஸ்ரீரங்கம்

ஸ்ரீமான் குவளகுடி சிங்கமய்யங்கார் என்ற மஹா தர்மிஷ்டரை அறியாதார் எவ இருக்கமாட்டார்கள். அவர் ஸ்ரீரங்க நகர் வாசியாய் பல தர்மங்கள் ஏற்படுத்தி அவைகளைப் பாதுகாக்கும்படி தனது பேரன் ஸ்ரீமான் கஸ்தூரிரங்கய்யங்காரை நியமித்திருந்தார் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

ஷை ஸ்ரீமான் குவளகுடி கஸ்தூரிரங்கம் அய்யங்கார், அவரது தர்ம பாடசாலையின் மானேஜராக இருந்து தர்மத்தை மிகவும் திறமையுடன் பரிபாலித்து வந்தார்.

ஸ்ரீரங்கம் கோயிலில் அனேக காலம் டிரஸ்டி பதவியிலமர்ந்து நற்கியாதியுடன் நற்கிரியைகளைச் செய்து போந்தார். பல வருஷங்கள் முனிசிபல் கவுன்சிலராயுமிருந்தார். சென்ற இரண்டு வருஷங்களில் ஆலயப்பிரவேச எதிர்ப்பு இயக்கத்தில் அவர் எடுத்துக்கொண்ட பங்கு எண்ணிறந்தவை. பிரபல ஸஜ்ஜனியாயிருந்தவர். இவ்வளவு கியாதியுடன் விளங்கிவந்த இவர் அதிபால்யத்தில் எவரும் எதிர்பாராத நிலைமையில் சென்ற ஓரிருமாத காலம் நோவாய்ப்பட்டிருந்து நாளுக்கு நாள் குணத்தையடைந்து வருகையில், மன்னார்கோடி ஸ்ரீ ராஜகோபாலன் திருவடி வாரத்தில் திடீரென சென்ற ஆவணிமீ 26 (10—9—40) செவ்வாயன்று இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகத்தை எய்தினார். ஆஸ்திகர்களின் அளவிலா துரதிருஷ்டவசமேயாகும்.

இவர் ஸம்பந்தப்பட்ட பல பொது ஸ்தாபனங்கள் இவரது ஞாபகார்த்தமாக விடுமுறையும் அளித்தன. ஸ்ரீரங்கம் தேவஸ்தானமும் அரைநாள் விடுமுறையளிக்க

ஸ்ரீ கிருஷ்ண சரித்திரம்

கம்ஸவதம்.

கம்ஸன் உக்ரஸேன மகாராஜாவினுடைய பிள்ளை என்று ஏற்பட்டிருந்தாலும் அவன் தாயார் த்ருமிளன் என்ற ஒரு அஸுரன் உக்ரஸேனனைப்போல் வேஷம் போட்டுக் கொண்டுவந்தவுடன் சேர்ந்ததால் கம்ஸன் பிறந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது ஆகையால் கம்ஸனை கீதையின் 16-வது அத்யாத்தில் சொல்லப்பட்ட சரீரத்திலுள்ள ஆஸுரிபாவமாக சொல்லலாம். கம்ஸன் சகோதரிக்கு தேவகி என்று பெயர் இருப்பதால் அவளைதேவி பாவமாக சொல்லலாம். ஸ்ரீ கிருஷ்ணன் தேவகிக்கு பிள்ளை என்று சொலவதால் அவர் ஜாஸ்தியான தேவிபாவத்துடன் பிறந்ததாக சோல்லலாம். அந்த கம்ஸனை கிருஷ்ணன்வதம் பண்ணினதை அவர்தன் சரீரத்திலுள்ள ஆஸுரி பாவத்தை யோகத்தால் பூராவும் போக்கிக்கொண்டதாக சொல்லாம். மேலும் கம்ஸ வதத்திற்கு பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு உபநயனமானது ஞானத்தை உபதேசம் செய்கிறகிரியை ஆகையால் அதற்கு முன் ஆஸுரி பாவம் போயிற்று என்று சொல்வது உசிதமாகயிருக்கிறது.

(ஜராஸந்த யுத்தம்.)

ஜராஸந்தன் முதலானவர்களை 18 தரம் தோற்கடித்ததும் பாரதத்தில் சொல்லிய அர்ஜுனனுடைய 18 நாள் யுத்தமும்போல யோகியின் சரீரத்தில் நடக்கும் புண்ய பாபங்களின் யுத்தமாக சொல்ல இடமுண்டு. ஜ்யோதிஸ் சாஸ்திரப்படி நவக்ரகங்கள்ஒன்பதில் புண்ய க்ரஹங்கள் 3½ இவைகுரு, சுக்ரன், புதன், சுக்லபக்ஷசந்திரன் ½ புண்யக்ரஹம். மற்ற 5½ கிரகங்களும் பாப கிர [illegible]

தைக் கொடுத்ததாயும், அதற்கு கிருஷ்ணன் ஒருமலையின் குகையில் புகுந்ததாக சொல்ல பட்டிருக்கிறது. யோகியானவன் தியானம் செய்யும் பொழுது கண்விழிகள் புருவங்களின் மத்தியில் விழவேண்டியதால் அந்த கண்களின் கருப்பு மணிகள் மேல் இமைகளுக்கு இடுக்கில் போகவேண்டியிருப்பதால் அவைகளிலுள்ள கிருஷ்ணன் ஒருமலைமான் குகையில் ஒளிந்தது போலச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலம் தியானம் செய்யும் பொழுதுகள் இமைகள் கொட்டாமல் இருக்கவேண்டியது. முசுகுந்தனுடைய சாபத்தால் காலயவனன் செத்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் துவாரகையை கிருஷ்ணன் நிர்மாணம் செய்ததற்கு முன் சொல்லப்பட்டிருப்பதால் இதன் கீழ்துவாரகை நிர்மாணம் விவரிக்கும் பொழுது காலயவனன் கதையின் இரகஸ்ய அர்த்தம் நன்றாய் விளங்கும் மேலும் பாகவதம் 4-வது ஸ்காந்தம் 29-வது அத்யாயத்தில் தாடகையை காலநேமி என்று அர்த்தம் செய் திருப்பதால் காலயவனனையும் காலநேமி என்றே அர்ததம் செய்ய இடமுண்டு.

அய்யாத்துறை அய்யர்,
ரிடையர்டு ஸப். மா.

காளையார் கோவில் பாடசாலை ஆண்டுவிழா

பட்டாக்கண்மாய் கர. ராம. ஸ்ரீ முத்துமாணிகம்பிள்ளை அவர்களை போஷகராக்கொண்ட காளையார் கோவில் ஸ்ரீ ஸரஸ்வதி இலவச வாசக சாலையின் முதலாவதாண்டு நிறைவு விழா வைபவம் விக்கிரம-ஹூ ஆவணி-மீ 25உ (9—9—40) திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு ஷெயூர் கோவாப்ரேடிவ் பாங்கு காரியதர்சி ஸ்ரீ மு. முத்தண்ணவைய்யங்கார் [illegible]

ஆகவே உங்கள் குழந்தைகளை ஸனாதன தர்ம வித்யாலயத்தில் சேர்த்து சிறப்புடன் விளங்கச்செய்வீர்களாக.

அவ்வமயம் கோவிலூர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் வி. வி. ரெங்கநாத சாஸ்திரிகளவர்களும் இன்னும் பல பெரியோர்களும் வித்தியாலயத்தின் நோக்கங்களை விளக்கி உபன்யாஸம் செய்வார்கள்.

ஜாதி ஹிந்துக்கள், ஆண், பெண், குழந்தைகள் சேர்த்து கொள்ளப்பெறும்.

க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியார்,
தலைவர், வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்,
கோட்டையூர்.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமத் ராமாயண நவாஹம்

சென்னை திருவல்லிக்கேணி ஹிந்துஹைஸ்கூல் கட்டிடத்தில் செப்டம்பர்-மீ 3உ செவ்வாய்க்கிழமை முதல் 11உ புதன்கிழமை வரையில் ஸ்ரீமத் ராமாயணம் நவாஹ முறையில் ஸ்ரீமான் குலபதி பி. எ. சுப்பிரமணிய அய்யர் ரிடையர்டு தலைமை உபாத்தியாயர் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டது.

அதில் முக்கியமாக இந்த ஸ்ரீ ராமாவதாரத்தில் பகவான் சரணாகதி தர்மத்தை ஸ்தாபிக்க அவதாரம் செய்தாரென்று சொல்லி உதாரணமாக இளைய பெருமாள் என்று வழங்கும் லக்ஷ்மண ஸ்வாமியையும், பரதாழ்வானையும், சுக்ரீவனையும், காகா அசுரனையும், ஸமுத்திர ராஜனையும் இவர்களால் செய்யப்பட்ட சரணாகதியை மிகவும் தெளிவாக எடுத்து உரைத்தனர்.

மேலும் சித்த சுத்தி மாத்திரம் போதாது என்றும் ஆஹார நியமத்தால் காயசுத்தி அவசியம் வேண்டுமென்றும் கூறினர்.